1991 செப்டம்பர் 27] [பேரவைத் தலைவர்]

(2) தமிழ்நாடு அரசின் அனாதை இல்லங்கள் மற்றும் கருணை இல்லங்கள் குழுவின் நிர்வாகக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாகும். இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு இப்பதவியின் காலம் முடிவு அடையும்.

வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 28–9–1991 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 30–9–1991 திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1–10–1991 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 3–10–1991 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே, சென்னை, கோட்டையில் இருக்கும் 'குழுக்கள் கூடும் அறையில்' வாக்கெடுப்பு நடைபெறும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 28-9-1991 காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

116. 1989–90 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1948–ஆம் ஆண்டு மின்சார (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

117. 1989-90–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் பதின்மூன்றாம் ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது).

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்